*1975 அக்டோபர் 28]*

### *Houses for Shop Assistants*

* 37 *Q.*—Thiru G. SWAMINATHAN (on behalf of Thiru D. SANTOSHAM): Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) whether it is a fact that at the Conference of the Shop Assistants' Unions, held in Theni on 30th June 1975, a Memorandum was presented requesting that houses should be constructed by the State Housing Board for the benefit of Shop Assistants; and

(*b*) if so, the action proposed to be taken thereon?

### கடை உதவியாளர்களுக்கு வீடுகள்

திரு. ஜி. சுவாமிநாதன் (திரு. டி. சந்தோஷம் சார்பில்): மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 30—6—1975-ஆம் நாளன்று தேனியில் நடைபெற்ற கடை உதவியாளர்கள் சங்கங்களின் மாநாட்டில், கடை உதவியாளர்களின் பயனுக்காக மாநில வீட்டு வசதி வாரியத்தால் வீடுகள் கட்டப்பட வேண்டும் என்று கேட்டு கோரிக்கை கொடுக்கப்பட்டது உண்மையா?

(இ) ஆமெனில், அது குறித்து எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கை யாது?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

### *Bus Accident near Kilianallur*

* 38 *Q.*—Thiru Y. VENKATESWARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Labour and Transport be pleased to state—

(*a*) the number of passengers who sustained injuries on 18th January 1975, when a bus of the Tamil Nadu State Transport Department plunged into the river near Kilianallur on Tiruchirapplli–Salem road; and

(*b*) the extent of damages caused to the bus?

## கிளியநல்லூர்க்கு அருகில் பேருந்து விபத்து

**திரு. ஓய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் :** மாண்புமிகு தொழிலாளர் நலன்—போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்கண்ட வினுவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கடந்த 18-1-1975-ஆம் நாள் அன்று திருச்சி-சேலம் வழியில், கிளியநல்லூர்க்கு அருகில், தமிழக அரசு போக்குவரத்துத் துறை பேருந்து ஒன்று ஆற்றில் விழுந்ததால் எத்தனே பயணிகள் காயமுற்றனர் ?

(இ) அதனுல், பேருந்துக்கு ஏற்பட்ட சேதம் எவ்வளவு ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** (அ) வினுவில் குறிப்பிடப்பட்டுள்ள விபத்து 14-1-1975-ல் நிகழ்ந்ததாகும். 18-1-1975-ல் அல்ல. இவ் விபத்தில் யாரும் காயமடையவில்லே.

(இ) வண்டிக்குச் சேதம் சுமார் 975 ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது.

**திரு. ஓய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் :** இந்த அரசு பஸ் ஆற்றிலே விழுந்ததால், அதனே மீட்க வேருெரு பஸ் கருவிகளுடன் வந்து அதை மீட்டிருக்கிறது. அப்படி மீட்கும்போது அந்த பஸ்ஸில் ஏதாவது உறுப்புகள் சேதம் அடைந்ததா ; எவ்வளவு என்ற விவரங்களே அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** ஏற்கெனவே சொன்னேன். அந்த வண்டிக்குச் சேதம், 975 ரூபாய் அளவுக்கு ஏற்பட்டிருக்கிறது. தற்போது அந்த வண்டி ஓடிக்கொண்டிருக்கிறது.

## *Motor Cars for the Members of the Legislature*

*39 Q.—THIRU Y. VENKATESWARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Labour and Transport be pleased to state the number of Members of the Legislature who have purchased Motor Cars during the year 1975. from the quota assigned to them?

## சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு மோட்டார் கார்கள்

**திரு. ஓய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் :** மாண்புமிகு தொழிலாளர் நலன்-போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்பட்ட பங்கீட்டிலிருந்து, 1975 ஆம் ஆண்டு எத்தனே உறுப்பினர்கள் மோட்டார் கார்கள் வாங்கியுள்ளனர் ?